# மனிதம்

பதினாறும் கிடைத்திட்ட போதும்
பதினேழாவது எங்கே எனத்
தேடும் மனிதம்;

தீண்டியது சுட்ட போதும்
சுட்டதைத் திரும்பச் சென்று
தொடும் மனிதம்;

உறைகல்லாய் உள்ளம் இருக்க
ஊரெல்லாம் உண்மையைத் தேடி
ஓடும் மனிதம்;

அமிர்தமும் நஞ்சு என்றிருக்க
மேலும் மேலும் மிகையை
நாடும் மனிதம்;

கொண்டு செல்வது பூஜ்யம் என்றும்
இடைவிடாது வாழ்க்கையில் கணக்குப்
போடும் மனிதம்;

எல்லாம் நிறைந்த இவ்வாழ்க்கை
ஒரு வரப்ரசாதம் எனப்
பாடும் மனிதம்...

அ. ஜோ
பெங்களூர், 19 டிசம்பர் 2009